புத்துலகம் படைக்கும் இறையாட்சிப்பணி ஆற்றுவதே திருஅவையின் தலைமைப் பணியாகும். திருஅவையில் பெரும்பான்மையாக வாழும் பொதுநிலையினர் முன்னணி பணியாளர்களாய் இருக்க வேண்டும். உலக ஆயர்கள் மாமன்றம் 2021-2023 பொதுநிலையினருக்கு அளிக்கும் அரிய வாய்ப்பை ஏற்றுக் கொண்டு, புத்துலகம் படைக்க புறப்பட வேண்டும்.

அருள்பணி. **பூபதி லூர்துசாமி**

செயலர்

தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு

## மறைவட்ட செய்திகள்

### **புனித சூசையப்பர் ஆலயம்,** மோட்சவாடி

புனித சூசையப்பர் ஆலயம், மோட்சவாடி பங்கில் கடந்த 05-12-2021 அன்று Msgr. I. ஜான் ராபர்ட், வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் அவர்கள் முப்பெரும் விழாவை தலைமை ஏற்று சிறப்பு செய்தார்.

1. புனித சூசையப்பர் ஆண்டு நிறைவு விழா
2. முதல் நற்கருணை மற்றும் உறுதிபூசுதல் விழா
3. ஆயர் மாமன்ற தொடக்க விழா

அந்நாளின் நிகழ்வுகள் அனைத்தும் பங்கு மக்கள் அனைவரின் ஒத்துழைப்போடு சிறப்பாக நடைபெற்றது. காலை 10.30 மணிக்கு Msgr. I. ஜான் ராபர்ட், வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் அவர்களுக்கு ஆரோக்கிய அன்னை கெபியிலிருந்து பூ மாலை அணிவித்து எமது இளைஞர்கள் பறை இசை முழங்க, பங்கு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆலயத்திற்கு மகிழ்ச்சியோடு அழைத்து வந்தனர். பேருந்து செல்லும் சாலையிலிருந்து ஆலய நுழைவாயில் வரை சிறு குழந்தைகள் வரவேற்பு நடனம் ஆடி, பூக்களை தூவி, மன மகிழ்வோடு அழைத்து வந்தனர். 50 உறுதிபூசுதல் பெறுபவரும் அதில் 14 முதல் நற்கருணை பெறுபவரும் வேதியர் சாமுவேல் அவர்களின் பயிற்சி மற்றும் வழிகாட்டுதலின் பேரில் வரிசையாக ஆலயத்திற்குள் நுழைந்தனர். 9 பெண்கள் கும்ப அஞ்சலி எடுக்க திருப்பலி தொடங்கியது. பேரருட்தந்தை. Y. அந்தோனிராஜ், சேத்பட் மலை, அருட்தந்தை. த. சிகாமணி, மறைமாவட்ட பரிபாலகரின் செயலர் ஆகியோர் திருப்பலியில் இணைந்து எமது பிள்ளைகளுக்காகவும், மக்களுக்காகவும் ஜெபித்தனர். திருப்பலியில் மறையுரையின்போது Msgr. I. ஜான் ராபர்ட் அவர்கள் அருளடையாளம் பெறும் பிள்ளைகளை கேள்வி கேட்க பிள்ளைகள் தெளிவோடும், தைரியத்தோடும் பதில் அளித்தனர்.

புனித சூசையப்பர் ஆண்டு நிறைவு விழா முன்னிட்டு கிளைபங்குகளுக்கு (செப்டாங்குளம், அல்லியந்தல், இஞ்சிமேடு, தாழனூர்) புனித சூசையப்பர் சுரூபம் வழங்கப்பட்டது. பங்கு மற்றும் கிளைபங்கிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் புனித சூசையப்பர் படம் வீட்டில் வைக்க கொடுக்கப்பட்டது. புனித சூசையப்பர் சுரூபம் மற்றும் படங்களை அன்பளிப்பாக கொடுத்த எமது பங்கில் பணிசெய்யும் சலேசிய அருட்சகோதரிகளுக்கு சிறப்பாக அருட்சகோதரி ஆனி அவர்களுக்கு நன்றிகள். இறுதியாக, பிள்ளைகள் நடனம் ஆடி நன்றி செலுத்தினர். அனைத்து கிளைபங்கிலுள்ள இறைமக்கள் Msgr. I. ஜான் ராபர்ட் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தனர்.





